# வரைவுகடாதல்: தொல்காப்பியமும் அகநானூறும்



த. முத்தமிழ்
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி-24
**email: dmuthamil87@gmail.com**

தோழி தலைவியைத் தலைவன் வரைந்துகொள்ளாது காலந்தாழ்த்தும் சூழலில் தலைவனிடம் தலைவியை வரைந்து கொள்ளுமாறு பல்வேறு காரணங்களைக் கூறியும் தலைவிக்கு ஏற்படும் இடையூறுகளைக் (வெறியாட்டு, இற்செறிப்பு, அலர், தலைவனையே எண்ணி தலைவி மெலிதல், வருந்துதல்) கூறியும் வரைவினை வேண்டுவாள். இது'வரைவு கடாதல்' ஆகும். இவ்வரைவுகடாதல் சூழலானது தொல்காப்பியத்திலும் எட்டுத்தொகை அகநூல்களுள் ஒன்றான அகநானூற்றிலும் எவ்வாறு அமைந்துள்ளது என்றும், அகநானூற்றில் அமைந்துள்ள வரைவுகடாதல் சூழலானது தொல்காப்பியத்துடன் எவ்வாறு பொருந்தியும் மாறுபட்டும் அமைந்துள்ளது என்றும் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

"வரைவு கடாதல் - மணந்து கொள்ளுதலைப் பற்றி உசாவுதல்; கடாவல் -திருமணத்தில் செலுத்தல்"[1] என்று கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழியகராதி குறிப்பிடுகிறது.

மு. இராகவையங்கார் வரைவுகடாதல் என்பதற்கு, "தலைவன் இருவகைக் குறிகளிலும் பலகாலும் வந்தொழுகும் இடத்து, இக்களவு வெளிப்படச் சுற்றத்தார் இற்செறிப்பரோ என்றும், வழியாலும் பொழுதாலும் தலைவற்கு ஏதம் வருங்கொல் என்றும் தோழி அச்சமுற்று, இவ்வொழுக்கமொழுகல், நுங்குடிப் பிறப்புக்குஞ் சிறப்புக்கும் பொருந்தாமையின், இனி நீவிர் இவளை மணந்து கொள்வதே தகுதியென்று தலைவனை வரைவுகடாவத் தொடங்குவாள் (வரைவு கடாதல் - மணந்து கொள்ளுதலைப் பற்றி உசாவுதல்)"[2] என்று விளக்கமளிக்கின்றார்.

மேலும், அவர் "இவ்வரைவு கடாவும் முறை 'குறிப்பு','வெளிப்படை' என இருவகையாகப் பகுக்கப்படுவதைக் காணலாம். குறிப்பாவது தோழி தலைவனை நோக்கி 'எம் மன்னை தலைமகளது வேறுபாடு கண்டு, இ∴து இவட்கு எதனால் வந்ததென்று ஆராய்வாளாயினள்'எனப் பொய்தலைப் பெய்து கூறுதல் போல்வது. இதனால் போந்தது, அன்னை அதன் காரணமறிந்து இற்செறிக்கக் கூடுமாதலின் அதற்குள் நீவிர் வரையாது தாழ்ப்பதென்? என்பதாம். வெளிப்பட வரைவு கடாதலாவது,'நுங்களவொழுக்கம் ஊரரால் அறியப்பட்டு, முதலில் அம்பலாய் முளைத்துப் பின் அலராக வளர்ந்தது இனி வரையத் தாழ்க்கற்பாலிர் அல்லர்' என்றாற் போல்வது"[3] என்று விளக்குகின்றார்.

டாக்டர் ் வ.சுப.மாணிக்கனார், ‘‘காமம் காழ்கொண்ட இளைய நெஞ்சங்களுக்கு மேல் செய்ய வேண்டுவன புலப்படா. எண்ணிப் பார்க்கும் அறிவு சில நாளைக்குத் தோன்றாது. இவ்விருவர் செய்கையைத் தோழி அறிவு நிலையில் நின்று நாடுகின்றாள். இளையாளாயினும் பொறுப்பு உணர்ந்தவளாதலின், திருமணம் செய்துகொள்க என்று தலைவனை இடித்துரைக்கின்றாள்’’[4] என்று விளக்கமளிக்கின்றார்.

இரா.சண்முகம், ‘‘களவுக் காலத்தில் தலைவியைச் சந்திக்கத் தலைவன் இரவுக்குறியிலும் பகற்குறியிலும் பன்முறை வந்தொழுகுவான். அப்போதெல்லாம் தலைவனிடம் தோழி பன்முறை உரையாடுவாள். இக்களவுக் காலத்தை மேலும் நீட்டித்தால் ஊரலர், இற்செறிப்பு, வெறியாட்டு, நொதுமலர் வரைவு போன்ற பல இன்னல்கள் ஏற்பட வாய்ப்புண்டு என அறிந்த அறிவுடைத் தோழி,‘களவு’ என ஒன்று நடந்தது எனத் தோன்றா வகையில் மணத்தை முடித்து வைக்கப் பல செயல்களை மேற்கொள்வாள். பல்வேறு வழிகளால் தலைவனை வற்புறுத்துவாள். ‘இனியும் இவ்வாறெல்லாம் களவிலேயே வந்து தலைவியைக் கூடும் வழக்கத்தை விடுத்து விரைந்து மணம் செய்துகொள்ள வேண்டும்’ என்று தலைவனை வேண்டும்முறையில் அவளது உரையாடல்கள் அமையும். தோழியின் இம்முயற்சியே வரைவு கடாதல் ஆகும்.

வரைவு – திருமணம். கடாதல் - வன்மையாகச் சொல்லுதல் - தலைவன் மனத்தில் தைக்குமாறு அறிவுரை கூறுதல்’’[5]என்று விளக்கமளிக்கின்றார். மேற்கூறப்பட்ட அறிஞர்களின் கருத்துப்படி வரைவுகடாதல் என்பது,

1. தலைவன் வரும் வழியில் அவனுக்கு ஏற்படும் ஏதத்தினையும் தலைவனது சிறப்பினையும் கூறி வரைவிற்குத் தூண்டுதல்.
2. குறிப்பாகவும் வெளிப்படையாகவும் அமையும்.
3. தோழி அறிவுநிலையில் நிற்பது.
4. களவு என்ற ஒன்று நடந்தது என்பதறியாது கற்பாக மாற்றுவதற்கு எடுக்கும் முயற்சி.

என்பனவாகும்.

## தொல்காப்பியத்தில் வரைவுகடாதல் - நிகழும் கூற்றுக்கள்

வரைவுகடாதலின் போது தலைவன் கூற்று நிகழ்த்துவதாகவும், வரைவு மேற்கொள்ளுமாறு நேரடியாகவோ குறிப்பாகவோ தோழி தலைவனிடம் கேட்பதாகவும் கூற்றுக்கள் அமையும் என்று தொல்காப்பியம் சுட்டுகிறது.

### தலைவன் கூற்று

தோழி தலைவனிடம் தலைவியை வரைந்துகொள்ளுமாறு வேண்டும்போது தலைவன் நிகழ்த்தும் கூற்றுக்களைப் பின்வரும் நூற்பா அடிகள் வழி அறியலாம்.

**‘‘வரைதல் வேண்டித் தோழி செப்பிய**

**புரைதீர் கிளவி புல்லிய எதிரும்**

**வரைவுடம் படுதலும் ஆங்கதன் புறத்தும்**

**புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்**

**கிழவோன் மேன என்மனார் புலவர்" (கள.105:11-15)**

தோழி தலைவனிடத்து விரைவில் தலைவியை மணம் செய்துகொள் என்று கூறும்போது தலைவன் குற்றமற்ற சொற்களால் பதிலுரைப்பான். தோழி கூறியதற்கு உடம்பட்டு வரைவிற்கு ஒப்புக்கொண்டு பேசுவான் அல்லது வரைவு மேற்கொள்ளும் காலத்தைச் சற்று நீட்டிக்கும் பொருட்டு மறுத்துப் பேசுவான் அப்பொழுது தலைவனது கூற்று நிகழும்.

## தோழி கூற்று

தோழி தலைவனிடம் தலைவியை வரைந்து கொள்ளுமாறு வேண்டுவதனை மூன்று வகைகளாகப் பகுக்கலாம்

**தோழி கூற்று**

| | | |
|---|---|---|
| வரைவு கடாதற்கான காரணங்கள் | வரைவு கடாவும் முறை | வரைந்து கொள்ளுமாறு நேரடியாகவே வேண்டல் |

## வரைவு கடாதற்கான காரணங்கள்

தோழி தலைவனை வரைவு கடாதற்கான காரணங்கள்:

**ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்**

**காப்பின் கடுமை கையற வரினும்**

**களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்**

**காதல் மிகுதி உளப்படப் பிறவும்**

**நாடும் ஊரும் இல்லும் குடியும்**

**பிறப்புஞ் சிறப்பும் இறப்ப நோக்கி**

**அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ**

**அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும் (கள.112:29-36)**

**பொழுதும் ஆறும் காப்பு மென்றிவற்றின்**

**வழுவனாகிய குற்றங் காட்டலும்**

**………………… அவனூறஞ்சலும்**

**இரவினும் பகலினும் நீவா என்றலும்**

**கிழவோன் தன்னை வாரல் என்றலும்**

**நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்**

**புரைபட வந்த அன்னவைப் பிறவும்**

**வரைதல் வேட்கைப் பொருளஎன்ப (பொருளி.207)**

**களவியலில் வரைவு கடாதற்கான காரணங்கள்**

1. தலைவன் வரும் வழியில் ஏற்படும் ஏதத்தை எண்ணி தாங்கள் (தோழியும் தலைவியும்) வருந்துவதைக் கூறி விரைவில் வரைந்து கொள்ளுமாறு தோழி வேண்டுவாள்.

2. தலைவிக்குக் காப்புமிகுதி இருப்பதனால் தோழியும் தலைவியும் கூறிய குறியிடத்தையும், காலத்தையும் நீக்கி தலைவியின் காதல் மிகுதியை எடுத்துச் சொல்லி விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு தோழி வேண்டுவாள்.

3. தலைவனது நாடு, ஊர், இல், குடி, பிறப்பு, சிறப்பு போன்றவற்றினை எடுத்துக் கூறி அத்தகைய சிறப்புடையவன் திருமணம் செய்துகொள்ளாமல் காலம் நீட்டித்தல் என்பது தகாத செயலென்று கூறி, விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு வேண்டுவாள்.

**பொருளியலில் வரைவு கடாதற்கான காரணங்கள்**

1. தலைவன் வருகின்ற வழியினையும், காலத்தினையும், காவலர்கள் காவல் காப்பதனையும் எடுத்துக் கூறி வரையுமாறு தோழி வேண்டுவாள்.

2. தலைமகளுக்கு ஏற்படும் இடையூறினைக் (நொதுமலர் வரைவு, வெறியாட்டெடுத்தல், இற்செறிப்பு) கூறி, வரைந்து கொள்ளுமாறு தோழி வேண்டுவாள்.

3. தலைமகனைப் பகற்குறி விலக்கி இரவுக்குறியில் வா என்றும், இரவுக்குறி நீக்கி பகற்குறியில் வா என்று கூறியும் தலைவனைக் குறியிடத்து வராதே என்று கூறியும் விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் பேசுவாள்.

4. நன்மை மற்றும் தீமையை எடுத்துரைத்து (நன்மை தீமை என்பது தலைவனது நாடு, ஊர், குடி, இல் போன்றவற்றின் சிறப்பினை எடுத்துரைத்து) விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் கூறுவாள்.

**வரைவுகடாவும் முறை**

தோழி தலைவனிடம் வரைவுகடாயும் முறையினைப் பின்வரும் தொல்காப்பிய நூற்பா அடி வழி அறியலாம்.

**“தன்னை யழிதலும்……………” (பொருளி.207:3)**

தலைவன் இரவுக்காலத்துக் கொடிய வழியில் தனியே வருவதற்கு யான் ஏதுவாயினேன் எனத் தன்னை அழிவுபடுத்துரைத்துத் தோழி தலைவியை வரைந்துகொள்ளுமாறு தலைவனிடம் வேண்டுவாள்.

**வரைந்துகொள் என நேரடியாக வேண்டல்**

தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ளக் காலந்தாழ்த்தும்போது தோழி தலைவனை நேரடியாகவே திருமணம் செய்துகொள்ளுமாறு கேட்பாள் என்பதனைத் தொல்காப்பியர்,

**“வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்**

**மரீஇய மருங்கின் உரித்தென மொழிப”** (பொருளி.208)

என்ற நூற்பா வழிக் கூறியுள்ளார்.தலைவனிடத்துப் பல்வேறு காரணங்களைக் கூறித் திருமணம் செய்துகொள் என்று கூறாமல், வெளிப்படையாகவே களவொழுக்கத்தை நீட்டித்த போது தலைவனைத் திருமணம் செய்துகொள்ளுமாறு நேரடியாகவே தோழி கேட்பாள்.

## அகநானூற்றில் வரைவுகடாதல் - தோழி கூற்று: (21)

வரைவு கடாதல் சூழலில் தோழி அகநானூற்றில் நிகழ்த்தும் கூற்றுக்களாக 21 பாடல்கள் அமைகின்றன. அவற்றைப் பின்வருமாறு பகுக்கலாம்.

**தலைவனுக்குத் தலைவியின் நிலை கூறியது (4)**
**அலர் சுட்டியது (1)**
**இற்செறிப்பைச் சுட்டியது (4)**
**குறிமறுத்து வரைவுகடாயது (7)**
**தலைவி செய்த உணவினை உண்ணவருமாறு அழைத்து வரைவுகடாதல் (1)**
**வெறியாட்டினைக் கூறி வரைவுகடாதல் (1)**
**மணந்துகொள் என்று நேரடியாகக் கூறல் (3)**

“உலகத்தார் ‘மணஞ்செய்து கொள்ளுமாறு வரைந்துகொள் எனக் கூறுமிடத்தும், தலைவியை அணுகுவதற்கு இயலாமையைக் கூறி அகற்றுமிடத்தும், இக்களவொழுக்கம் தந்தை தன்னையர்க்குப் புலனாயின் யாதாய் விளையுமோ என அஞ்சுவளாய் அவ்வச்சத்தினைத் தலைவனுக்கு அறிவுறுத்தலும் தலைவன் வரும் வழியினது தீமையைத் தாங்கள் அறிதலுற்றமையால் நேர்ந்த கலக்கத்தின் கண்ணும், தலைமகளை இற்செறித்துக் காத்தலின் கடுமை எல்லை கடந்தமையாலும், பகற்குறி இரவுக்குறி என்னும் இடமும் பகலும் இரவுமாகிய பொழுதும் ஆகத் தாங்கள் வரைந்து கூறும் நிலைமையை விலக்கி, தலைவன் தலைவியிருவரிடையே யமைந்த காதல் மிகுதியுட்படத் தலைமகனுக்கு நாடு, ஊர், மனை, குடியுயர்வு, பிறந்தயாண்டு, பெற்றுள்ள சிறப்பு என்பன பிறரின் ஒவ்வாது மேம்பட்டனவாதல் நோக்கித்தலைவனைக் குறித்துத் தோன்றிய கூற்றுக்களோடு கூட்டு அத்தன்மைத்தாகிய நிலைமையின் கூறுபாட்டினாலே மணஞ்செய்தலை வேண்டியும், தலைவியின் சுற்றத்தார் மகட்கொடுப்பதாக உடன்பட்ட தலைவனை விரைந்து மணந்துகொள்க எனத் தூண்டுதற்கண்ணும்”[6] தோழி வரைவுகடாவுவாள் என்று க. வெள்ளைவாரணர் கூறுகின்றார். அதற்கிணங்கவே பாடல்களும் அமையப்பெற்றுள்ளன.

## தலைவனுக்குத் தலைவியின் நிலை கூறியது: (4)

தோழி தலைவனிடம் அவன் வரைந்து கொள்ளாததினால் தலைவி எவ்வாறெல்லாம் துன்பப்படுகிறாள் என்றுரைத்துத் தலைவியை வரைந்து கொள்ளுமாறு கூறுகிறாள். “தலைவன் வரவு

நீட்டிக்க ஆசைப்படுகிறான். தலைவி விரைவில் திருமணம் முடிக்க விரும்புகிறாள். சமுதாயத்தில் பெண்மைக்குத்தான் கற்பு தேவை என வரையறுக்கப்பட்டதாலும், இயற்கையும் பெண்மைக்கே ஊறுவிளைப்பதாலும் தலைவி தன் கற்பிற்காக அஞ்சுகிறாள். பெண்மை காதலைத்தவிர வேறறியாதலால் ஆற்றாமை கொள்ள, தலைவனின் வாழ்வில் காதல் ஒரு பகுதியாக இருக்க, வரைவு நீட்டிக்கிறாள். நொதுமலர்வரைவு அச்சம், இற்செறிப்பால் தலைவனை அடிக்கடி காணமுடியாத நிலை ஆகிய காரணங்கள் தலைவியை வருத்துகிறது. தலைவன் களவை நீட்டிக்க விரும்புவதும், தலைவி திருமணத்தை விரும்புவதும் இயல்பாகிறது. இம்மனவியலை அறிந்த தோழி தலைவனை வரைவு கடாவப் பல்வேறு உத்திகளைக் கையாளுகிறாள்"[7] என்று சரளா இராகோபாலன் வரைவுகடாதலுக்குரிய பல்வேறு உத்திகளைக் கூறுகிறார். அவற்றுள் ஒன்று தலைவியின் நிலையினைக் கூறி வரைவுகடாதல் ஆகும். அவ்வகையில் 4 பாடல்கள் அமைந்துள்ளன.

தினை முற்றியது; இனி உன்னைத் தினைப்புனத்தில் காண முடியாததை எண்ணி இவள் நெற்றி அழகு தொலைந்தது. அருள் செய்யக்கருதின் வரைவாயாக (தாயங்கண்ணனார், அக.132)

தலைவனே! நீ அன்பில்லாதவன் என்பதை அறிந்திருந்தால் தலைவியின் அழகு கெட பசலை வராது செய்திருப்பேன் (மதுரைப்பாடலாசிரியர் நப்பாலனார், அக.172)

தலைவன் பிரிந்து செல்லும் சூழலில், இவள் தோள்கள் மெலிந்தன; கண் துயிலாது மனம் கலங்குவாள். நீயோ இரவிலும் உமது ஊர்க்குச் செல்லவே எண்ணுகின்றீர் (சாகலாசனார், அக.270) என தலைவியின் நிலையினைக் கூறி தோழி வரைவு கடாவுகிறாள்.

தலைவனது செயலைச் சுட்டி, கடலினைச் சான்றாகக் கொண்டு உன்னை வரைந்து இல்லறம் நடத்துவேன் என்று நீ உரைத்த சூளுரை பொய்யோ? (மதரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார், அக.320) என தோழி வரைவுகடாவுகிறாள்.

### அலர் சுட்டியது: (1)

தோழி தலைவனிடம் களவொழுக்கமானது புறத்தார்க்குத் தெரிந்து அலா் தூற்றுகின்றனா்; அதனால் தலைவியும் பல இன்னல்களை அடைகின்றாள். அதன்பொருட்டு விரைவில் வரைந்துகொள்வாயாக என்று கூறுகின்றாள்.

"நாணுடைய மகளிர் தம் களவைப் பிறர் அறிவதாலும் அறிந்தோர் தூற்றுவதாலும் அதை எவரும் விரும்பாததாலும் அலரை வெறுப்பது இயல்பாகிறது. அதனால் தோழி: தலைவனை வரைவுகடாவ ஊரலரைக் கருவியாகக் கொள்கிறாள்"[8] என்ற சரளா இராசகோபாலன் கூறுவதற்கிணங்க தோழி அலரினை ஒரு உத்தியாக் கொண்டு தலைவனிடம் வரைவுகடாவும் வகையில் ஒரு பாடல் அமைந்துள்ளது.

தலைவனே, நீ இரவில் வந்து உனது மார்பு வடுவுண்டாகும்படி முயங்கிப் போதல் எனக்கும் மிக இனிதாகும். இருப்பினும் அலரானது ஊரினிடத்து எழுந்தது (உலோச்சனார், அக.100) என தோழி வரைவுகடாவுகின்றாள்.

## இற்செறிப்பைச் சுட்டி வரைவுகடாயது: (4)

தலைவனிடத்துத் தோழி, தலைவி இற்செறிக்கப்பட்டதனைக் கூறி (வரைந்து) அதனால் தலைவி படும் இன்னல்களையும் கூறி வரைந்துகொள்ளுமாறு வேண்டுகிறாள். "ஊரவர் அலர் தூற்றலால் அன்னை அறிவாள் இற்செறிப்பு நிகழலாம். தலைவியைக் காணல் இயலாது; அதனால் உடனே வரைவு மேற்கொள்க என்று தலைவனிடத்து வரைவுகடாவும் உத்தியாக மேற்கொள்கிறாள் தோழி"[9] என சரளா இராசகோபலன் கூறுவதற்கிணங்க பின்வரும் 4 பாடல்கள் அமைகின்றன.

நாடனே, நீ பெற வேண்டுமென்று எண்ணிய இன்பங்கள் உனக்கு எங்ஙனம் அரியனவாகும்? மிக்க அழகினையும் மூங்கிலையொத்த பருத்த தோளினையும் உடைய தலைவி உன்னிடத்தே நிறுத்தவும் நில்லாது ஓடும் நெஞ்சினளாய் காதல் கொண்டுள்ளாள். இவளது தந்தை அரிய காவலில் வைத்துள்ளார். ஆனால், தினை அறுவடை செய்யப்பட்டால் தலைவி இற்செறிக்கப்படுவாள். மேலும், திங்கள் நிரம்பி காணப்பட்டது. திங்கள் நிரம்பிக் காணப்படும் வேளை திருமணத்திற்குரிய நாளாகும். அதனால் நொதுமலர் வரைவு வரும் முன்னரும் இற்செறிக்கும் முன்னும் வரைந்து கொள்வாயாயின் தலைவி உனக்குக் கிடைத்தல் என்பது அரிதல்ல (கபிலர், அக.2).

தலைவனே, எம்முடைய வளையலைத் தழும்புறும்படி அமுக்காதே, அன்னை இதனைக் காணின் (வளையல் அமுங்கியதனை) தலைவியை அரிய காவல்படுத்திவிடுவாள் (குடவாயிற்கீரத்தனார், அக.60)

மார்பனே, நீ பிரிந்தபோது கழியையும் சோலையையும் காணுமிடத்து நம் தலைவர் வாராரோ என எண்ணி தலைவி வருந்துவாள். அதனைக் கண்ட அன்னை அரிய காவலில் வைத்து இற்செறித்துள்ளாள் (குறுவழுதியார், அக.150).

தலைவனே, நடுக்கம் மிக்க பக்கமலையில் உள்ள கன்னியர் உறையும் மாங்காடு என்னும் ஊரின் காவலை ஒத்து தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள். தந்தையின் காவலினால் தனிமையுற்று இருந்தோம் (விற்றூற்று மூதெயினனார், அக.288)

என்ற இப்பாடல்கள் தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையைக் கூறி வரைவு கடாவும் வகையில் அமைகின்றன.

## குறி மறுத்து வரைவு கடாயது: (7)

தலைவன் குறியிடத்திற்கு வந்து தலைவியைச் சந்திக்க எண்ணும்போது இரவுக் குறியிடத்திற்குத் தலைவன் வருவதனால் தலைவனுக்கு ஏதேனும் ஊறு விளையுமோவென்று எண்ணியும் அதனால் தலைவி வருந்துவதனைக் கூறியும் குறியிடத்தை மறுத்து தோழி வரைவு கடாவுவாள். பகற்குறியிடத்து வரும்பொழுது அலர் ஏற்படுவதனைக் கூறி பகற்குறியை மறுத்து வரைவு கடாவுவாள். பகலில் வரும் தலைவனை இரவில் வருமாறு கூறி பின் இரவிலும் வரவேண்டாமென்று கூறி வரைவு கடாவுவதும் உண்டு.

“தலைவியின் அன்புக்குமுன் வழிஏதம் போன்ற இடையூறுகள் அவன் நெஞ்சில் நிலவுவதில்லை. ஆனால் தலைவியின் நெஞ்சில் தலைவனைச் சந்திக்கும்போது மட்டும் காதலுணர்வு மிகுகிறது. மற்ற நேரங்களில் அவன் வரும் வழி அச்சமே நெஞ்சை அலைக்கிறது. வழியச்சத்தால் களவில் நிறைவின்மை வழி ஏதமின்றிச் சென்றானோ என்ற துடிப்பு ஆகியன மகளிரின் வாழ்வில் அமைகின்றன. தலைவனின் அஞ்சாமையும் காதலுணர்வும் ஒருபுறமாகவும் வழிஏதம் பற்றிய அச்சம் மறுபுறமாகவும் முரண்நிலையில் இப்பகுதி அமைந்துள்ளது. அதனால் இக்கொடுமைப் பின்புலம் வரைவுகடாவும் உத்தியாகத் தோழியால் பயன்படுத்தப்படுகிறது”[7] என்று சரளா சராசகோபலன் கூறுவதற்கிணங்க பின்வரும் 7 பாடல்கள் அமைகின்றன.

**தலைவன் வரும் வழியினேதங்கள் குறித்துத் தலைவி வருந்துதல்: (4)**

தலைவன் வரும் வழியினேதங்கள் குறித்துத் தலைவி வருந்துவதாக 4 பாடல்கள் அமைந்துள்ளன.

நாடனே, கொடிய இரவுக்குறியில் (யானைகள் காட்டில் உள்ள குறவரின் குடிசையைப் பெயர்த்துச் செல்லும்) நீ வரின் மென்மைத் தன்மை வாய்ந்த இத்தலைவி உயிர்வாழாள்! (கபிலர், அக.12)

தலைவனே, இரவுப்பொழுதை உம்முடன் கூடிக் கழித்துப் பின் இரவுக்குறியின் ஏதத்திற்கு அஞ்சித் துன்பம் மிகுதலால் நீர் ஒழுகும் கண்களோடு வருந்தியிருக்கின்றோம். வேட்டுவரும் உறங்கும் நடுஇரவில் விலங்குகள் செல்லும் வழியாகிய சிறுநெறியில் நீ வருதலை ஒழித்தல் வேண்டும் (கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான், அக.168)

தலைவனே, இடியானது முழங்கும் அச்சம் வரும் அகன்ற இடத்தே வேலை மட்டுமே துணையாகக் கொண்டு கற்களையுடைய ஒடுங்கிய வழியில் ஏதத்தைப் பாராது வரும் உனக்கு ஏற்படும் துன்பத்தினை எண்ணி வருந்துவோர் எம்மையன்றி வேறுயாருமில்லை (ஆவூர்கிழார் மகனார் கண்ணனார், அக.202).

தலைவனே, காட்டிடத்து விலங்குகள் செல்லும் வழியில் யானைகளும் செல்லும். இடி அதிகமாக முழங்கும். அவ்வழியானது பாம்பினையும் புலியினையும் கண்டு யாவரும் அஞ்சும் வகையில் உள்ளது. இத்தகைய வழியில் இரவிலே நீ துணையின்றி வருகின்றாய். நீ தலைவியை வரைந்துகொள்ள விரும்பினால் இன்று முதலாக அக்கொடிய இரவிலே வராதே. நீ வருவாயாயின் நாங்கள் இவ்விடத்திலேயே துயருற்று மயக்கமுறுவோம். அத்துயரத்தை நீக்கும்பொருட்டு நீ உனது சீறூரை அடைந்த பின்னர் உம்மூரினை நீ அடைந்ததனைத் தெரிவிக்கும் பொருட்டு ஊதல் (சீழ்க்கை-விசில்) வேண்டும் (கபிலர், அக.318).

மேற்கூறிய 4 பாடல்களும் தலைவன் வரும் வழியினேதங்களின் பொருட்டுத் தலைவி வருந்துவதனைக் கூறி, குறி மறுத்து வரைவுகடாவதாக அமைகின்றன.

**பகற்குறி, இரவுக்குறி ஆகிய இரண்டிலும் உள்ள இடர்ப்பாடுகளைச் சுட்டி இரண்டு குறியையும் மறுத்தது: (3)**

பகற்குறி, இரவுக்குறி ஆகிய இரண்டிலும் உள்ள இடர்ப்பாடுகளைச் சுட்டி இரண்டு குறியையும் மறுத்து வரைவுகடாவும் வகையில் 3 பாடல்கள் அமைந்துள்ளன.

பாதியிரவாகிய இருளில் யானையை நடுங்கும்படி தாக்கி பெரிய புலியானது முழங்கும். அத்தகு மலைச்சாரலிலே நீ வாராதிருப்பாயாக. தலைவியும் நானும் தினைப்புனம் காக்கக் கருதியுள்ளோம். நாளை பகலிலே தலைவியின் கூந்தலிடத்து இன்பம்பெறும் துயிலை நீ பெறுவாய் ஆயினும், செங்காந்தள் மலரைக் கொய்யவும் அருவியில் நீராடவும் யாரேனும் வருவர் என்று குறிப்பாகவுணர்த்திப் பகற்குறியை மறுக்கிறாள் தோழி (மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார் அக.92).

தலைவனே, பகலிலே நீ வந்தால் ஊரார் கூறும் அலரிற்கு அஞ்சுகிறோம். நடு இரவில் கொடிய வழியில் நீ தனிமையில் வருவதனால் பகற்குறியில் ஏற்படும் அலரைக் காட்டிலும் அஞ்சுகிறோம். பலநாளும் சந்தித்த தினைப்புனத்திலே தினைக்கதிர் முற்றியதனால் தினையைக் கொய்து விடுவர். ஆதனால் தலைவி இரங்கத்தக்கவள் ஆவாள் (கபிலர், அக.118)

அன்னை சினந்தாலும் அலர் எழுந்தாலும் பகலிலே வருவாயாக என்றுரைத்துத் தோழி தலைவனிடம் வரைவு கடாவியதனைப் பின்வரும் கபிலர் பாடல்வழி அறியலாம்.

**கிளைபா ராட்டுங் கடுநடை வயக்களிறு**

**முளைதரு பூட்டி வேண்டு குளகருத்த**

**……………………………………..**

**ஒண்பூ வேங்கை கமழுந்**

**தண்பெருஞ் சாரல் பகல்வந் தீமே (அகம்.218)**

இருள் நிறைந்த நடுயாமத்தில் வழி தடுமாறி வருவோரை புலி பார்த்துக் கொண்டிருக்கின்ற அரிய வழியில் வருவதனை எளிதென்று எண்ணுகிறாள். நாங்களும் உன்னுடைய மார்பை ஒருநாள் தழுவவில்லையாயின் அணிகள் நெகிழ மெலிந்து விடுவோம். அதனால், இக்களவொழுக்கத்தை அன்னை அறிந்தாலும் அறிந்திடட்டும். பெண்டிர் கூறும் அலர் மொழியை எம்மூர் கேட்பதாயினும் கேட்கட்டும். தோன்றிப் பூவுடன் வேங்கைப் பூ நாறும் மலைச்சாரலில் பகலில் வருவீராக என்று தலைவனிடம் தோழி கூறுகிறாள். தலைவனிடம் இரவுக்குறியினை மறுத்து பகற் குறியில் வருமாறு அழைத்துப் பின் பகற்குறியில் அன்னை அறிந்திடுவர். அலர் ஏற்படும் என்று குறிப்பாகக் கூறி பகற்குறியையும் மறுத்து வரைவுகடாவினாள்.

## தலைவி செய்த உணவினை உண்ண வருமாறு அழைத்து வரைவுகடாதல்: (1)

தலைவி செய்த உணவை உண்ண ஒருநாள் வருமாறு தலைவனை அழைத்துத் தோழி வரைவகடாயதனைப் பின்வரும் நன்பலூர் சிறுமேதாவியார் பாடல்வழி அறியலாம்.

**களவும் புளித்தன விளவும் பழுநின**

**சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர்**

……………………………………..

**மன்ற இரும்புதல் ஒளிக்கும்**

**புன்புல வைப்பினெஞ் சிறுநல் லூரே (அகம்.394)**

தலைவனே, எமது சிறிய நல்ல ஊரினிடத்துக் களாவும் பழுத்துப் புளிப்புச் சுவையைத் தந்தன. விளாம்பழமும் முதிர்ந்து பழுத்தன. செம்மறியாட்டினது முற்றிய தயிராகிய உலையில் அரிசியுடன் ஈயலையும் இட்டுச் சமைத்த புளிப்புச் சுவை தரும் விருப்பம் மிக்க சோற்றினை வெண்ணெயுடன் சேர்த்து உன் மனைவி விருந்தயர, உன் ஏவலருடன் நீயும் எமது சிறிய இல்லிற்கு வந்து உண்பாயாக! என்று கூறுவதன்வழி தோழி வரைவு கடாவுகிறாள்.

## வெறியாட்டினைக் கூறி வரைவுகடாதல்: (1)

தலைவன் பிரிந்ததனால் தலைவியின் உடலில் மாற்றம் ஏற்பட அம்மாற்றத்திற்குக் காரணம் வேலனே என்றெண்ணி அன்னை வெறியாட்டெடுப்பாள். அதனைத் தோழி தலைவனிடம் கூறி நீ தலைவியை வரைந்துகொண்டால் இவ்வின்னல்கள் ஏற்படாது என்றுரைத்து வரைவுகடாவுவாள்.

“வெறியாட்டால் இற்செறிப்பு மிகுதிப்பட களவில் சந்திப்பு அரிதாகிறது. வேற்றுத் தெய்வத்தைத் தொழ நேரிடுவதால் தலைவியின் கற்புக்கு இழுக்கு நேரிடுகிறது. வெறியாட்டு நிகழ்கையில் தலைவியின் பெயர் முருகனோடு தொடர்புபடுத்துவதால் தலைவி தலைவன் இருவருக்குமே இழுக்கு உண்டாகிறது. வெறியாட்டின் பின் நோய் தீரவில்லையெனில் ஐயுற்றுப் பெற்றோர் நொதுமலர் வரைவிற்கு ஏற்பாடு செய்யலாம். தன் அன்பிற்குரிய தலைவியின் பொருட்டு வெறியாட்டெடுக்கப்படுவதை நினைத்துத் தலைவன் நெகிழ்ந்து வரைவுக்கு முயலத்தூண்டுவான்”[11] என்றெண்ணி தோழி வெறியாட்டினை முன்வைத்து வரைவுகடாவுகிறாள். அவ்வகையில் பின்வரும் பாடல் அமைகின்றது.

தலைவனே, தலைவியின் நீலமணி போன்ற மேனி பசலையால் பொன் நிறமாக மாற அதன்பொருட்டு அன்னை தெய்வத்திற்குக் கையுறைப் பொருளாக கள்ளினையும் மாலையையும் வெள்ளாட்டுக் கிடாயினைச் செலுத்தியும் தன் மகளுக்குற்ற நோய் தணியும் உபாயம் அறியாளாய் அழுதாள். நீலப்பூப் போலும் மையுண்ட கண்ணினையுடைய இத்தலைவியும் நானும் காலைப்பொழுதில் விளையாடி உன்னுடன் நகையாடிய குற்றத்தினால் தான் இவ்வாறு பசலை நோயுற்றோமோ என தோழி தலைவனிடம் கூறி குறிப்பாக வரைவு கடாவுகிறாள் (ஆவூர்மூலங்கிழார், அக.156)

## மணந்துகொள் என்று நேரடியாகக் கூறல்: (3)

தோழி தலைவனிடத்து தலைவியை மணந்துகொள் என்று நேரடியாகக் கூறும் வகையில் மூன்று பாடல்கள் அமைந்துள்ளன.

தலைவனே, நடுநாள் இரவில் நீ இங்கு வந்தால் தீங்கு செய்தவனாய் ஆவாய். நீ வாராது ஒருநாள் இடையீடுபட்டாலும் என் தோழி உயிர்வாழாள். தலைவியின் தோளினை முயங்குதலை நீயும் விரும்புகின்றாய். சான்றோராவார் மிகக் காதல் கொண்டார் ஆயினும் பழியுடன் கூடிய வரும் இன்பத்தினை விரும்பார். அதனால் நீ தலைவியை வரைந்துகொண்டு பழியொடு வாழாதிருத்தலில் குறை என்னவுளது? அவ்வாறு வரைந்துவிடின் களவொழுக்கத்தினை அறியாத எமர் முறைப்படி வதுவை நிகழந்திட, நீ இவளை வரைந்துகொள்ளும் ஒழுக்கத்தினை நோக்கி யாம் புதியவர் போல நடந்துகொள்வோம். தலைவியும் புதிய நாணத்துடன் காணப்படுவாள். அதனால் விரைவில் வரைந்துகொள்வாயாக (ஆவூர்கிழார் அக.112).

தலைவனே, இவளைப் பிரிந்து செல்ல எண்ணினாயாயின் இவளது அழகு கெட்டுவிடும். இவளது அழகு இவளுக்கே உரியதாக வேண்டுமெனில் உன்னூர்க்கு வரைந்துகொண்டுபோக வேண்டும் (அம்மூவனார், அக.10)

தலைவனே, தலைவியின் மார்பினை நீ நினைக்குந்தோறும் நடுங்கும் நெஞ்சினையுடையையாகி நின்று வருந்தினாய். ஒன்றையொன்று பிரிந்திருக்காத மகன்றில் பறவை போல ஒருவர் நெஞ்சில் ஒருவர் பொருந்தியுள்ளீர். தலைவியது தோள்கள் அழகு கெடாமல் பாதுகாப்பேன் என்று இப்பொழுது கூறுவாயாக (மதுரை மருதனிளநாகனார், அக.220)

## அகநானூறும் தொல்காப்பியமும் - ஒப்பீடு

## பாடப்பட்டடுள்ள தொல்காப்பியப் பகுதிகள்

வரைவுகடாதல் என்ற சூழலின்போது தோழி கூற்று நிகழ்த்தும் மேற்குறிப்பிட்ட 21 பாடல்களுள் தெல்காப்பியத்தோடு பொருந்தும் சூழல்கள் பின்வருமாறு:

**வரைவுகடாதற்கான காரணங்கள்:**

**“ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்**
**காப்பின் கடுமை கையற வரினும்**
**களனும் கொழுதும் வரைநிலை விலக்கிக்**
**காதல்மிகுதி உளப்படப் பிறவும்” (கள.112:29-32)**
**“பொழுதும் ஆறும் காப்பு மென்றிவற்றின்**
**வழுவினாகிய குற்றங் காட்டலும்**
**---------------------------------- அவனூறஞ்சலும்**
**இரவினும் பகலினும் நீவா என்றலும்**
**கிழவோன் தன்னை வாரல் என்றலும்” (பொருளி.207:1-5)**

**வரைந்துகொள்ளென்று நேரடியாக வேண்டல்:**

**“வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்**
**மரீஇய மருங்கின் உரித்தென மொழிப” (பொருளி.208)**

**களவியல்:**

1. தலைவன் வரும்வழியில் ஏற்படும் ஏதத்தை எண்ணி தாங்கள் (தோழியும் தலைவியும்) வருந்துவதைக் கூறி விரைவில் வரைந்கொள்ளுமாறு தோழி வேண்டுவாள்.
2. தலைவிக்குக் காப்புமிகுதி இருப்பதனால் தோழியும் தலைவியும் கூறிய குறியிடத்தையும், காலத்தையும் நீக்கி தலைவியின் காதல் மிகுதியை எடுத்துச் சொல்லி விரைவில் திருமணம் சொய்துகொள்ளுமாறு தோழி வேண்டுவாள்.

**பொருளியல்:**

1. தலைவன் வருகின்ற வழியினையும் காலத்தினையும் காவலர்கள் காவல் காப்பதனையும் எடுத்துக்கூறி வரையுமாறு தோழி வேண்டுவாள்.
2. தலைமகளுக்கு ஏற்படும் இடையூறினைக் (நொதுமலர்வரைவு, வெறியாட்டெடுத்தல், இற்செறிப்பு) கூறி, வரைந்துகொள்ளுமாறு தோழி வேண்டுவாள்.
3. தலைமகனைப் பகற்குறி விலக்கி இரவுக்குறியில் வா என்றும், இரவுக்குறி நீக்கி பகற்குறியில் வா என்று கூறியும் தலைவனைக் குறியிடத்து வராதே என்று கூறியும் விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் வேண்டுவாள்.

வரைந்துகொள் என நேரடியாக வேண்டல்:

வெளிப்படையாகவே, களவொழுக்கதைத் தலைவன் நீட்டித்த போது தலைவனைத் திருமணம் செய்துகொள்ளுமாறு நேரடியாகவே தோழி கேட்பாள்.

இச்சூழல்களில் பாடல்கள் பொருந்தி அமைகின்றன. அவற்றுள் குறிமறுத்து வரைவுகடாதலிலும் (7பாடல்கள்) தலைவியின் நிலை கூறி வரைவுகடாதலிலும் தான் (4பாடல்கள்) மணந்துகொள் என்று நேரடியாகக் கூறுதலிலும் (3பாடல்கள்) பாடல்கள் அதிகமாக அமைந்தள்ளன. அதற்கடுத்த நிலையில் இற்செறிப்பினைச் சுட்டி வரைவுகடாதலும் (1பாடல்) அலர் சுட்டி வரைவுகடாதலும் (1பாடல்) வெறியாட்டினைக் கூறி வரைவுகடாவியும் (1பாடல்) பாடல்கள் அமைகின்றன.

இதன்வழி தோழி தலைவனிடம் தலைவியைத் திருமணம் செய்துகொள் என்று முதலில் குறியையே மறுக்கிறாள். அதற்கும் தலைவன் செவிமடுக்காத நிலையில் தலைவியினுடைய நிலையைக் கூறி (தலைவன் வரைந்து கொள்ளாததால் தலைவியினுடைய துன்பநிலையைக் கூறி) வரைந்து கொள்ளுமாறு வேண்டுகிறாள். அதனையும் தலைவன் கேளாத நிலையில் தலைவக்கு இற்செறிப்பு ஏற்பட்டதனைக் கூறியும், ஊரிலுள்ளோர் அலர் மொழிக் கூறுவதனையும், வெறியாட்டெடுக்க இருப்பதனைக் கூறியும் வரைந்துகொள்ளுமாறு வேண்டுகிறாள். அதனையும் தலைவன் பொருட்படுத்தாத நிலையில் வெளிப்படையாகவே தலைவியை வரைந்துகொள்ளுமாறு கூறுகிறாள். வரைவுகடாதல் என்ற சூழலில் தோழிக்கு இத்துணைப் பாடல்கள் அமைந்துள்ளதன்வழி தலைவன் வரைவின் மீது அக்கறை கொண்டவனாக இருந்திருப்பானா என்பது அய்யத்திற்குரியதே.

## பாடப்படாத தொல்காப்பியப் பகுதிகள்

தொல்காப்பியர் சுட்டியிருந்து, ஆனால் இலக்கியத்தில் சுட்டப்படாத சூழல்கள் பின்வருமாறு

வரைவு கடாதற்கான காரணங்கள்:

**“நாடும் ஊரும் இல்லும் குடியும்**
**பிறப்புஞ் சிறப்பும் இறப்ப நோக்கி**
**அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ”    (கள.112:33-35)**

**“நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்**
**புரைபட வந்த அன்னவைப் பிறவும்”** **(பொருளி.207:6)**

**“தன்னை யழிதலும்”** **(பொருளி.207:3)**

தலைவனது நாடு, ஊர், இல், குடி, பிறப்பு, சிறப்புப் போன்றவற்றினை எடுத்துக் கூறி அத்தகைய சிறப்புடைய நீ தலைவியைத் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் நீட்டித்தல் உனக்குத் தகாத செயலென்று கூறி, விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு வேண்டுவாள். தலைவன் இரவுக்காலத்தக் கொடியவழியில் தனியே வருவதற்கு யான் ஏதுவாயினேன் என தன்னை அழிவுபடுத்துரைத்துத் தோழி தலைவியை வரைந்துகொள்ளுமாறு தலைவனிடம் வேண்டுவாள். இச்சூழல்களில் பாடல்கள் அமையவில்லை.

தலைவனது பெருமைகளைக் கூறி வரைந்துகொள்ளாமல் இருக்கின்றாயே என்று தோழி தலைவனிடம் வினவினால் தலைவனுக்கு அது சிறுமையாக இருக்குமென்றெண்ணி புலவர்கள் அப்பொருண்மையில் பாடல்களை அமைக்கவில்லை போலும்.

தோழி தன்னை முன்னிலைப்படுத்தித் தன்னால்தான் தலைவன் இரவுக்குறியில் கொடியவழியில் வருகின்றான் என்று தலைவன் வரும் வழியை எண்ணி வருந்தி வரைந்துகொள்ளுமாறு வேண்டுகிறாள். புலவர்கள் தோழி தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டு வரைவுகடாவுவதாகக் கூறினால் பாடல்கள் அவ்வளவு சிறப்புடன் இருக்காது என்றெண்ணி அப்பொருண்மையில் பாடல்களை அமைக்கவில்லை போலும். (தோழி தலைவன் தலைவி இருவரையும் சேர்த்து வைக்க ஒரு கருவியாக இருக்கவேண்டும். தன்னையே முன்னிலைப்படுத்தி வரைந்துகொள் என்று கூறுவது சற்று மாறுபாடாக இருப்பதனால் புலவர்கள் இப்பொருண்மையில் பாடாது விட்டிருக்கலாம்).

மேலும், வரைவுகடாதல் என்ற சூழலில் தலைவனுக்குத் தொல்காப்பியத்தில் கூற்று அமைய, இலக்கியத்தில் பாடல்கள் இல்லாதது குறிப்பிடத்தக்கது. “தோழி தலைவனிடம் தலைவியை வரைந்துகொள்ளுமாறு வேண்ட, தோழி கூறியதற்கு உடன்பட்டோ அல்லது மறுத்தோ தலைவன் பதிலுரைப்பான்” (கள.105:11-15) என்று தொல்காப்பியம் அமைகிறது. தலைவனைத் தோழி தலைவியை வரைந்துகொள்ளுமாறு வேண்டியவிடத்துத் தலைவன் வரைவின் மீது வேட்கை இல்லாமல் வரைவு வேண்டாமென்று மறுத்தால் ஆண்மகனுக்கு இழுக்காகும் என்றெண்ணி புலவர்கள் அப்பொருண்மையில் பாடல்களை அமைக்கவில்லை போலும். தோழி வரைந்துகொள் என்று வினவியவிடத்து வரைவிற்கு உடன்பட்டுக் கூறியதாகவும் பாடல்கள் இல்லை. இதன்வழி தலைவன் வரைந்துகொள் என்று தோழி கூறியதற்கு எப்போதும் ஒப்புகொள்ளமாட்டானோ என்று எண்ண இடமளிக்கிறது.

## மாறுபட்ட செய்தி

தலைவி செய்த உணவினை உண்ண வருமாறு தோழி தலைவனை அழைக்கும் விதமாக ஒருபாடல் (நண்பலூர் சிறுமேதாவியார்: அக.394) அமைந்துள்ளது. அப்பொருண்மையில்

தொல்காப்பியம் (வரைவுகடாதல்) அமையப்பெறவில்லை. இப்பாடல் புலவரின் மாறுபட்ட சிந்தனையாகவுள்ளது.

## முடிவுகள்

- வரைவுகடாதல் பற்றி தோழி கூற்றில் களவியலில் (கள.112:29-31,34-36) கூறப்பட்டுள்ள செய்தியே ஒழிபியலாகிய பொருளியலிலும் (பொருளி.207: "தன்னையழிதலும்" பொருளி.207:3 தவிர) கூறப்பட்டுள்ளது. வரைவுகடாதல் பற்றி இச்செய்திகள் கூறியதுகூறல் போல அமைந்துள்ளன. இலக்கணத்தில் வரைவுகடாதல் என்ற கூற்றிற்குரியவர்கள் தலைவன் மற்றும் தோழி இருவரே ஆவர். தலைவன் கூற்று வரைவின் மீது அக்கறை இல்லாததுபோல காணப்படுகிறது. தோழியின் கூற்றானது தலைவனிடம் ஏதேனும் ஒரு காரணத்தை முன்வைத்து வரைவிற்குத் தூண்டுவதாகவே அமைந்துள்ளது. தலைவன் வரைவின் மீது அக்கறை இல்லாதிருப்பதால்தான் தோழிக்கு வரைவுகடாதலில் கூற்று அதிகமாக அமைந்துள்ளது என்பது புலனாகிறது.

- இலக்கியத்தில் தலைவன் வரைவுகடாதல் தொடர்பாக யாங்கனும் கூற்று நிகழ்த்தவில்லை. தோழி மட்டுமே வரைவு கடாவதாக பாடல்கள் அமைந்துள்ளன. தொல்காப்பிய வரைவுகடாதல் செய்திகளோடு அகநானூற்றின் வரைவுகடாதல் செய்திகள் பெரும்பாலும் பொருந்தியே அமைந்துள்ளன.

- வரைவு என்பதனுடன் தொடர்புடைய முக்கிய பாத்திரமான தலைவிக்கு (வரைவுகடாதல் கூற்றில்) இலக்கணம் இலக்கியம் இரண்டிலுமே பங்கு இல்லை. வரைந்துகொள்ளுமாறு தலைவி தலைவனைக் கேட்கக் கூடாதென்பது இலக்கணம் இலக்கியம் இரண்டிலுமே மரபாக இருந்துள்ளது என்பதை இதன்வழி அறிய முடிகிறது. மேலும் தலைவிக்குத் தலைவனைத் திருமணத்திற்குத் தூண்டவேண்டும் என்ற எண்ணமிருப்பினும் மரபு காரணமாக சான்றோர்கள் அதனை பாடலில் கூற மறுத்துள்ளனரோ என்று எண்ண இடமளிக்கிறது.

### குறிப்புகள்

1. கதிரைவேற்பிள்ளை, தமிழ் அகராதி,ப.356.
2. மு.இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.71.
3. மேலது, ப.71.
4. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.64.
5. இரா.சண்முகம், அறத்தொடு நிற்றலும் வரைவு கடாதலும், பக்.12-13.
6. க. வெள்ளைவாரணர் (உ.ஆ), தொல்காப்பியம் களவியல் உரைவளம், பக்.207-209
7. சரளா இராசகோபாலன், சங்க இலக்கியம், பக்.75-76
8. மேலது, ப.80
9. மேலது,ப.80
10. மேலது, ப.79
11. மேலது,ப.81

| வரைவு கடாயது – தோழி (21) | | | | |
|---|---|---|---|---|
| எண் | சங்க அகப்பாடல் செய்திகள் | தொல்காப்பியத்துடன் ஒத்து விளங்கும் செய்தி | புலவர்களால்பாடப்படாத தொல்காப்பியச் செய்திகள் | புலவரின்சற்று மாறுபட்ட கருத்து-தொல்காப்பியர் நேரடியாகச்சுட்டாதவை |
| 1.<br><br><br><br>2.<br><br><br><br><br>3.<br><br><br><br><br><br><br><br><br><br>4. | தலைவனக்குத் தலைவியின்வருத்தநிலை கூறிவரைவு கடாயது(அக.132,172,270,320)<br><br>அலர்சுட்டி வரைவுகடாயது (அக.100)<br><br><br>இற்செறிப்பைக்கூறி வரைவுகடாயது (அக.2,60,150,288)<br><br><br><br><br><br><br>குறிமறுத்து வரைவுகடாயது (அக.12,168,202,318,92,118,218) | "காதல்மிகுதி உளப்படபிறவும்" (களா.112:32)<br><br>"வழுவினாகிய குற்றங்காட்டலும்" (பொருளி.207:2)<br><br>"வழுவினாகிய குற்றங்காட்டலும்" (பொருளி.207:2)<br>"காப்பின்கடுமை கையறவரினும் களனும்பொழுதும் வரைநிலைவிலக்கி" (களா.112:30-31)<br><br>"ஆற்றதுதீமை அறிவுறுகலக்கமும்" (களா.112:29)<br>"பொழுதும் ஆறும் காப்புமென்றிவற்றின்" (பொருளி.207:1)<br>"அவனூறஞ்சலும் இரவினும்பகலினும் நீவாஎன்றலும் கிழவோன்தன்னை | "நாடும்ஊரும்இல்லும் குடியும்பிறப்புஞ்சிறப்பும் இறப்பநோக்கி அவன்வயின்தோன்றிய கிளவியொடுதொகைஇ" (களா.112:33-35)<br><br>"நன்மையும்தீமையும் பிறிதினைக்கூறலும் புரைபடவந்த அன்னவைப்பிறவும்" (பொருளி.207:6-7)<br><br>"தன்னையழிதலும்" (பொருளி.207:3) | தலைவிசெய்த உணவினை உண்ணவருமாறு அழைத்தல் (அக.394) |

| | | | | |
|---|---|---|---|---|
| 5.<br><br>6.<br><br>7. | வெறியாட்டினைக்கூறி வரைவு கடாதல்(அக.156)<br><br>மணந்துகொள்என்று நேரடியாகக்கூறுதல் (அக.112,10,220)<br><br>தலைவிசெய்த உணவினை உண்ணவருமாறு அழைத்தல் (அக.394) | வாரல்என்றலும்'' (பொருளி.207:3-5)<br><br>''வழுவினாகிய குற்றங்காட்டலும்'' (பொருளி.207:2)<br><br>''வேட்கைமறுத்துக் கிளந்தாங் குரைத்தல் மரீஇயமருங்கின் உரித்தென மொழிப'' (பொருளி.208)<br><br>------------------------------- | | |

dmuthamil87@gmail.com